கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்.

**MCOP No: 179/2023** **நாள் 25.11.2025**

சாட்சியான உதவி ஆய்வாளர், கிருஷ்ணன் கோவில் காவல் நிலையம் என்பவருக்கு சாட்சிய சம்மன் சார்பாகி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அவரை எ.ம.சா.3 ஆக 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் திரு.K.மாரிராஜா என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மதிவாணன் | தாலுகா | |
| த–பெ | மாயாண்டி | தொழில் | உதவி ஆய்வாளர், கிருஷ்ணன் கோவில் காவல் நிலையம் |
| கிராமம் | | வயது | 53 |

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் கிருஷ்ணன் கோவில் காவல் நிலையம் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க சம்மன் வந்தது. எனக்கு சார்பான சாட்சிய சம்மனில் கடந்த 16.02.2023ம் தேதி நடைபெற்ற சாலை விபத்து சம்மந்தமாக குற்ற எண்.25/2023 இதச பிரிவுகள் 279, 304(a)படியான வழக்கு கோப்பினை கொண்டுவந்து சாட்சியம்அளிக்க சொல்லப்பட்டிருந்தது. அந்த குற்ற வழக்கானது RCS .36/2025 ஆக MOF ஆக முடிக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டபடும் மேற்படி குற்ற எண்.25/2023 வழக்கில் காவல் நிலையத்தில் இருந்து குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2 ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் தாக்கலான RCS .36/2025க்கான நீதிமன்ற சான்றிட்ட நகல் என்றால் சாட்சியானவரால் அதனை பார்வையிடப்பட்டு சரி என்று சாட்சியம் அளிக்கிறார் மேற்படி ஆவணம் **எ.ம.சாஆ.1. (மனுதாரர்கள் தரப்பில் மேற்படி குற்ற எண்.25/2023 படி முதல் தகவல் அறிக்கையானதையும், மற்றும் குற்ற இறுதி அறிக்கையானதையும் அப்போது இருந்த காவல் ஆய்வாளர் தான் குறியீடு செய்து சாட்சியம் அளிக்க முடியும் என்று சொல்லி ஆட்சேபித்து ஆட்சேபனை பேரில் எமசாஆ.1 குறியீடு செய்யப்பட்டது)** . முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தவர் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜா என்பவர் ஆவார். சாட்சிகளை விசாரித்து குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தவர் அப்போது இருந்த காவல் ஆய்வாளர் திரு. முத்துக்குமார். மேற்படி குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் அப்போது இருந்த காவல் ஆய்வாளர் திரு.முத்துக்குமார் என்பவர் ஆவணங்களை பரிசீலித்து தான் தாக்கல் செய்துள்ளார். அதற்கான ஆவணங்களை நான் இன்று நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். காவல் ஆய்வாளர் திரு.முத்துக்குமார் தற்போது ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் பணியில் உள்ளார்.

**குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில்**

நான் கடந்த 15.04.2025ம் தேதி முதல் கிருஷ்ணன் கோவில் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். குற்ற எண்.25/2023 முதல் தகவல் அறிக்கையானதை கடந்த 16.02.2023ம் தேதியில் கிருஷ்ணன் கோவில் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட போது நான் அப்போது பணியில் இல்லை. முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யப்பட்டது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்து

கொள்வதற்கு முன்பாக காவல் ஆய்வாளர் சாட்சிகளை விசாரணை செய்தது பற்றியும் ஆவணங்களை பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் நான் தயார் செய்யவில்லை என்பதால் அதை பொறுத்து என்னால் சாட்சியம் அளித்துக் கொள்ளமுடியாது என்றால் சரிதான். எமசாஆ.1 ஆவணம் பொறுத்து காவல் ஆய்வாளர் திரு.முத்துக்குமார் என்பவரால் தான் தாக்கல் செய்துகொள்ள முடியும் என்றும் என்னால் தாக்கல் செய்துகொள்ள முடியாது என்று சொன்னால் அப்படியில்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 25th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.